**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

**CC.No.198/2017** **Date :20/04/2023**

**PW8 (சண்முகம் த/பெ.ராசு ) குறுக்கு விசாரணை தொடர்ச்சி** : சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**(எதிரி ஆஜர் )**

21.எந்த சாட்சியத்தின் அடிப்படையில் நடைமுறையில் உள்ள ரொக்க இரசீது வழங்காமல் புழக்கத்தில் இல்லாத போலி ரொக்க இரசீதை வழங்கியுள்ளார் என நான் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் விசாரணை அலுவலரின் விசாரணையின் மூலமாக நான் தெரிந்து கொண்டேன். இது குறித்து விசாரணை அலுவலர் எங்களது வாக்குமூலத்தில் கூறியுள்ளாரா என்றால் விசாரணை அலுவலர் அவரது வாக்குமூலத்தின் எந்த பகுதியில் கூறியுள்ளார் என்றால் வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை ஆனால் அவரது விசாரணை அறிக்கையில் கூறியுள்ளார். இந்த வழக்கில் கூறப்பட்ட உண்மையான ரசீதுகளை நான் கைப்பற்றியுள்ளேன். அது நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதா என்றால் அனுப்பப்பட்டுள்ளது. புழக்கத்தில் இல்லாத ரசீது யாரால் தயார் செய்யப்பட்டது என எனது விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். வங்கியின் எழுத்தர் கதிரேசன் என்பவர் மூலமாக தெரிந்து கொண்டேன். அந்த கதிரேசனை நான் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளேனா என்றால் இல்லை ஆனால் விசாரணை அலுவலர் விசாரித்துள்ளார். கதிரேசன் இந்த வழக்கில் எங்களால் சாட்சியாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். புழக்கத்தில் இல்லாத

ரசீதுகள் யாரிடமிருந்து கைப்பற்றப்பட்டது என்றால் விசாரணை அலுவலரால் அது தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அந்த புழக்கத்தில் இல்லாத ரசீதில் உள்ள கையெழுத்து எதிரியுடையதா என நான் ஒப்பிட்டுப் பார்த்தேனா என்றால் பார்த்தேன். ஒப்பிட்டு பார்ப்பதற்காக எதிரியின் மாதிரி கையப்பத்தை நான் பெற்றேனா என்றால் இல்லை ஆனால் ஆவணங்களின் அடிப்படையில் நான் அதை ஒப்பிட்டுப் பார்த்தேன். நான் போலி ரசீதில் உள்ள எதிரியின் கையொப்பமாக கூறப்படும் எழுத்தை ஒப்பிட்டு பார்க்க பயன்படுத்திய ஆவணம் எது என்றால் ரொக்க ரசீது புத்தகத்தை வைத்து சரிபார்த்தேன்.

22. ராமசாமி என்பவர் பெரம்பலூர் ஆட்சியர் கூட்டுறவு துணைப்பதிவாளர் மற்றும் இணை பதிவாளர் ஆகியோரிடம் புகார் கொடுத்ததாக எங்களிடம் வாக்குமூலம் அளித்துள்ளார் என்றால் சரிதான். அவ்வாறு கொடுக்கப்பட்டதாக கூறப்படும் புகாரை நாங்கள் கைப்பற்றவில்லை. அந்த அலுவலர்களை விசாரித்து நான் வாக்கமூலம் பதிவு செய்துள்ளேனா என்றால் பதிவு செய்துள்ளேன் அ.சா.1 முருகன் என்ற துணைப்பதிவாளர் இது பற்றி கூறியுள்ளார். அ.சா.1 முருகன் அவரது விசாரணையின் போது எங்களிடம் அவ்வாறு கூறவில்லை.

23. போர் மன்னன் என்ற சாட்சி புழக்கத்தில் இல்லாத ரசித்தேன் விசாரணை அதிகாரியிடம் ஒப்படைத்தேன் என கூறியுள்ளார் என்றால் சரிதான். ஆனால் அந்த ரசிதுகள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதா என்றால் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அந்த போலி ரசீதின் உண்மையான அசல் ரசீது

தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. போர் மன்னன் நீதிமன்றத்தில் முன்ஜாமீன் பெறுவதற்காக அந்த ரசீதை ஒப்படைத்துள்ளேன் என கூறியுள்ளார் என்றால் சரியல்ல.

24. அண்ணாமலை என்ற சாட்சி ரசீது எதையும் என்னிடம் இருந்து கைப்பற்றப்பட்டதாக அவரது விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான். அண்ணாமலை அவரது சாட்சியத்தில் ரசீதில் அவர்தான் கையொப்பமிட்டதாக எங்களிடம் கூறியுள்ளார் என்றால் சரிதான். ஆனால் எதிரி தான் அந்த கையப்பத்தை பெற்றார் என அவரது வாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் சரிதான்.

25. பாலகிருஷ்ணன் என்பவர் அவரது வாக்குமூலத்தில் ரசீது எண் 1405 இல் செயலாளர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க கையொப்பமிட்டு ரசீது பெற்றுக் கொண்டேன் என கூறியுள்ளார் என்றால் சரிதான். நானும் எனது தொகை வரவு வந்தால் போதும் என நினைத்து கையொப்பமிட்டேன் என அவர் கூறியுள்ளார். 31/05/2001 ல் ரசீது எண் 1147 மூலம் ரூ.6620/- செலுத்தி பெற்றுள்ளேன் என கூறியுள்ளார் என்றால் சரிதான். அது எந்த கணக்கிற்காக செலுத்தப்பட்டது என நான் எனது விசாரணையில் தெரிந்து கொண்டே நான் என்றால் தெரிந்து கொண்டேன். எந்த ஆவணத்தின் அடிப்படையில் அதை நான் தெரிந்து கொண்டேன் என்றால் பாலகிருஷ்ணன் கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் அதை நான் தெரிந்து கொண்டேன். பாலகிருஷ்ணன் எந்த கடனுக்காக ரசிதை பெற்றேன் என குறிப்பிட்டு

கூறியுள்ளாரா என்றால் கூறியுள்ளார். கடன் எண் 83 என்பதற்கு செலுத்தியுள்ளார். கடன் எண் 83 என்பது ரூ.21970/- க்கு கொடுக்கப்பட்டதா என்றால் சரிதான். இந்த கடனுக்கான கடன் பேரேட்டை பார்த்து இந்த கணக்கில் எவ்வளவு தொகை எந்தெந்த தேதியில் செலுத்தப்பட்டது என நான் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். இந்த வங்கி கணக்கில் பாலகிருஷ்ணன் எவ்வளவு நிலுவை தொகை செலுத்த வேண்டும் என்றால் நிலுவைத் தொகை ஏதும் இல்லை கடன் அனைத்தையும் செலுத்தி விட்டார். நான் விசாரணை செய்த போது அவருக்கு எந்த கடன் தொகையும் நிலுவையில் இல்லை என்றால் சரிதான். ரசீது எண் 1147 என்பதை யார் வழங்கினார் என்றால் எதிரி தான் வழங்கியுள்ளார். லக்ஷ்மணன் அந்த ரசிதை வழங்கியதாக இந்த சாட்சி அவரது வாக்குமூலத்தில் கூறியுள்ளாரா என்றால் இல்லை. ரசீது எண் 1147 என்பது என்னாலோ அல்லது பிரிவு 81 ன் கீழான விசாரணை அலுவலர் கைப்பற்றியுள்ளாரா என்றால் விசாரணை அலுவலர் கைப்பற்றியுள்ளார் நான் கைப்பற்றவில்லை. இந்த சாட்சி ரசீது எண் 1405 என்பதை வங்கி அலுவலரிடம் ஒப்படைத்ததாக தான் கூறியுள்ளார் என்றால் சரிதான். ஆனால் ரசீது எண் 1147 ல் வங்கி அலுவலரிடம் அல்லது விசாரணை அதிகாரியிடமோ ஒப்படைத்ததாக இந்த சாட்சி கூறவில்லை என்றால் சரிதான். ரசீது எண் 1405 யை விசாரணை அலுவலரிடம் ஒப்படைத்ததாக இந்த சாட்சி கூறவில்லை என்றால் சரிதான்.

.

26. மேலும் இந்த வழக்கிற்கான சாட்சிகள் மலர்செல்வி, போர்மன்னன், ராமசாமி, பாலகிருஷ்ணன், அண்ணாமலை ஆகியோர் விசாரணை அலுவலரிடம் வாக்குமூலம் கொடுத்ததாக எங்களது விசாரணையின்போது குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். ரசீது புத்தகம் அச்சடிக்கும் முறையை நான் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். பொதுவாக வங்கியில் ரசீது புத்தகங்கள் எப்போது இருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது என தனிப்பட்ட ஒரு பதிவேடு பராமரிக்கப்படும் என்றால் சரிதான். புழக்கத்தில் இல்லாத இந்த ரசீதுகள் இந்த வங்கியால் தான் அச்சடிக்கப்பட்டதா என்ற விவரத்தை நான் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். புழக்கத்தில் இல்லாத ரசீதுகளின் அடிக்கட்டையையோ அல்லது பயன்படுத்தப்படாத அந்த ரசீது புத்தகத்தையோ நான் கைப்பற்றி இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் அவ்வாறு ஒப்படைக்கவில்லை என்றாலும், நான் தாக்கல் செய்ததாக வழக்கிற்கென கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. புழக்கத்தில் இல்லாத ரசீதுகளை கொடுத்ததாக கூறப்படும் தேதிகளில் எவ்வளவு ரொக்க இருப்பு குறைபாடு இருந்தது என நான் பரிசோதனை செய்து பார்த்ததாக எனது ஆவணங்களில் எந்தவித குறிப்பும் இல்லை என்றால் சரிதான். ரசீது போடும் பழக்கம் உள்ள எழுத்தர் யாரையும் விசாரித்து நான் இந்த வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். புழக்கத்தில் இல்லாத ரசீதுகளில் காணப்படும் கையெழுத்து எதிரியின் கையெழுத்து அல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கு குறித்த விவரங்களை விசாரணை அதிகாரி ராமலிங்கம்

Draft

எங்களது விசாரணை அதிகாரி வாக்குமூலத்தில் எதுவும் கூறவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கிற்கான சாட்சி போர் மன்னன் மோசடி செய்ததாக வேறொரு வழக்கு அவர் மீது பதியப்பட்டு இதே நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. புழக்கத்தில் இல்லாத இந்த ரசீது எதிரியால் ஒருபோதும் வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றாலும் கடன் தொகை எல்லாம் வங்கியால் வசூல் செய்யப்பட்டு விட்டது என்றாலும் முறையாக விசாரணை செய்யாமல் விசாரணை அலுவலர் கொடுத்த அறிக்கையின் அடிப்படையில் நாங்கள் அலுவலகத்தில் வைத்து ஆவணங்களை தயார் செய்து எதிரிக்கு எதிராக இறுதி அறிக்கையை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

Taken down by / before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused/ pleader and admitted by the witness to be correct.

Judicial Magistrate No.I,
Perambalur.